**சுருக்கம்**

கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.சீ.மல்லன், த/பெ. (லேட்) திரு.ம.சீனிராஜ், தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எடி2) துறை**

அரசாணை ( 2 பத்தாண்டு ) எண். 148

நாள் : 30.11.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, கார்த்திகை–14

**படிக்கப்பட்டது:**

1. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.31144/நிபி8/1/2018, நாள்.18.07.2018

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018

-----

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், தேனி மாவட்டம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.ம.சீனிராஜ், என்பவர் 13.11.2013 அன்று இறந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 12.03.1960 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.03.2020 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.சீ.மல்லன் என்பவர் தனக்கு பணிநியமனம் வேண்டி 10.07.2015 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 12.04.1982 என்றும், திரு.சீ.மல்லன் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாக கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தனியர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில் தட்டச்சராக 12.04.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியருக்கு தட்டச்சர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 12.04.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று திரு.சீ.மல்லன், தட்டச்சர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 12.04.2017 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள்/ ஊதியம் நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.